# இயல் - 1

## இன்பத்தமிழ்

# ஆசிரியர் குறிப்பு

இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்

சிறப்புப்பெயர் : புரட்சிக்கவி,
பாவேந்தர்

எழுதிய நூல்கள்:

அழகின் சிரிப்பு

குடும்ப விளக்கு

இருண்ட வீடு

# செந்தமிழிக்கு பாவேந்தர்சூட்டியுள்ள பெயர்கள்

நிலவு
மணம்
பால்
வானம்
தோள்







தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

# சொல்லும் பொருளும்

- விளைவு – விளைச்சல்
- அசதி - சோர்வு
- சமூகம் - மக்கள் குழு
- மணம் - வாசனை

1) தொன்மை (Antiquity)
2) தனித்தன்மை (Individuality)
3) பொதுமைப் பண்பு (Common Characters)
4) நடுவு நிலைமை (Neutrality)
5) தாய்மைத் தன்மை (Parental Kinship)
6) இலக்கிய வளம் (Literary Powers)
7) உயர்சிந்தனை (Noble Ideas and Ideals)
8) மொழிக் கோட்பாடு (Linguistic Principles)




9) பிறமொழிக் கலப்பில்லாத தனித்தன்மை.(Ability to function independently without impact or influence of any other language and literature)
10) கலை,இலக்கியத் தன்மை வெளிப்பாடு (Originality in artistic and literary expressions)
11) பண்பாடு,கலை,பட்டறிவு வெளிப்பாடு (Finding expression in the culture,art and life experience of the civilized society)